29th October 1962]

* 884 கேள்வி.—திரு. கி. இரா. சம்பந்தம்: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழ்நாட்டில் சித்தமும் ஆயுர்வேதமும் ஒன்றியமைக்கப்பட்ட வைத்தியக் கல்லூரி எப்போது எங்கே திறக்கப்படும்?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: The matter is under consideration.

Firewood

* 885 *Q.*—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Agriculture be pleased to state the steps taken to relieve the distress caused to the public due to firewood shortage?

THE HON. SRI P. KAKKAN: A statement [a] is placed on the table of the House.

திரு. வை. சங்கரன்: பொதுவாக விறகுக்கு லாயக்குள்ள மரங்களை வளர்க்க வேண்டிய திட்டத்தை சென்னையிலும் அதைச் சுற்றியுள்ள மாவட்டங்களிலும் ஆரம்பிக்கப்போவதாக சர்க்காருடைய அறிக்கையிலிருந்து தெரிய வருகிறது. அதே போன்று மற்ற மாவட்டங்களிலும், மதுரை போன்ற நகரங்களிலும் விறகு பற்றுக்குறை இருப்பதால் அங்கும் மரங்களை வளர்ப்பதற்கு சர்க்கார் திட்டமிடுவார்களா? அப்படி மரங்களை வளர்த்து குறைந்த விலைக்குக் கொடுப்பதற்கு சர்க்கார் முன்வருமா?

கனம் திரு. பூ. கக்கன்: சென்னையில் மட்டும் அல்ல. மாகாணத்தில் எல்லா இடங்களிலும் விறகு பற்றுக்குறையை நீக்குவதற்கு விறகுக்கு லாயக்கான மரங்களையும் செடிகளையும் வளர்ப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. சவுக்க மரங்களைக்கூட வளர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. குறிப்பாக, தென்னாற்காடு, வடாற்காடு, கடலூர் வடக்கு, கடலூர் தெற்கு, வேலூர் வடக்கு, தெற்கு, செங்கற்பட்டு முதலிய இடங்களில் கூட மரங்களை வளர்ப்பதற்காக ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறோம். எந்த எந்த இடங்களில் மரங்களை வைப்பதற்கு இடங்கள் இருக்கின்றனவோ அங்கேயெல்லாம் வளர்ப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

திரு. பி. வி. சீராமுலு: இந்தப் பற்றுக்குறையின் காரணமாக நமது அண்டை நாடாகிய சிலோனிலும் மற்றும் மேலே நாடுகளிலும் உள்ளபடி, க்யாஸ் ப்ளாண்டை உபயோகப்படுத்துகிறார்களே அதைப்போலவே, நமது மாகாணத்திலும் க்யாஸ் ப்ளாண்டை வைக்க முடிவு எடுப்பார்களா? அப்படி வைத்து மக்களுக்கு விநியோகிக்க சர்க்காருக்கு ஏதாவது உத்தேசம் உண்டா?

கனம் திரு. பூ. கக்கன்: தனியாகக் கேள்வி போட்டால் முழு விவரம் கொடுக்க முடியும்.

---

[a] Printed as Appendix VI on pages 111-112